**செய்தி வெளியீடு எண்: 509** **நாள்:31.10.2016**

## மௌலிவாக்கத்தில் பாதுகாப்பற்ற நிலையிலுள்ள 11 அடுக்குகள் கொண்ட கட்டடம் நவம்பர் 2ஆம் தேதி இடிக்கப்படுகிறது – பொதுமக்களின் பாதுகாப்பிற்கு விரிவான ஏற்பாடு

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், மௌலிவாக்கம் கிராமம், போரூர் – குன்றத்தூர் சாலை, நில புல எண்.17 பகுதியில் அமைந்துள்ள 11 அடுக்குகள் கொண்ட கட்டடம் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது என கண்டறியப்பட்டது. பாதுகாப்பற்ற நிலையில் உள்ள இக்கட்டடத்தை இடிக்குமாறு மாண்புமிகு உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. அதன்படி மௌலிவாக்கத்தில் உள்ள பாதுகாப்பற்ற 11 அடுக்குகள் கொண்ட கட்டடம் 02.11.2016 (புதன்கிழமை) அன்று மதியம் 2.00 மணி முதல் 4.00 மணிக்குள் இடிக்கப்படவுள்ளது. இக்கட்டடம் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வெடிமருந்துகள் உபயோகித்து பாதுகாப்பான முறையில் வெடிக்கச்செய்து கட்டடம் அதே இடத்தில் உள்நோக்கி விழும் வகையில் இடிக்கப்படவுள்ளது.

இடிக்கப்படும் இக்கட்டடத்தைச் சுற்றி 100 மீட்டர் சுற்றளவில் அமைந்துள்ள அனைத்து கட்டடங்களின் தற்போதைய நிலை, பொதுப்பணித்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் ஆகிவற்றால் இணைந்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. 11 அடுக்குகள் கொண்ட இக்கட்டடம் இடிக்கப்படும் பொழுது பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பல்வேறு முன்னேற்பாடுகள் சம்மந்தப்பட்ட துறைகள் மூலம் விரிவாக செய்யப்பட்டுள்ளன. பொதுமக்களின் வசதிக்காக தற்காலிகமாக தங்குவதற்கு மதனந்தபுரம் பிரதான சாலை, எண்.199ல் அமைந்துள்ள ஸ்ரீ.எஸ்.ஏ.கே. ஜெய் மாருதி மஹால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய மஹாலுக்கு செல்ல கட்டணமில்லா பேருந்து வசதியும் செய்துதரப்படவுள்ளது.

இடிக்கப்படும் கட்டடத்திற்கு அருகில் முன்னெச்சரிக்கையாக இரண்டு தீயணைப்பு வாகனங்கள், நான்கு அவசர கால ஆம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும். 100 மீட்டர் சுற்றளவில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் கட்டடம் இடிப்பது குறித்தும், மாற்று இடத்திற்கு செல்வது குறித்தும் தனித்தனியாக அறிவிப்பு சம்மந்தப்பட்ட துறைகள் வாயிலாக வழங்கப்படும். இடிக்கப்படுவதற்கு முன்பு காவல்துறையும், மாவட்ட நிர்வாகமும் இணைந்து அப்பகுதியில் உள்ள அனைத்து மக்களும் வெளியேறிவிட்டார்களா என்பதை உறுதி செய்த பின்பு தான் இடிக்கும் பணி

மேற்கொள்ளப்படும். கட்டடம் இடிக்கப்படுவது குறித்து அப்பகுதி பொதுமக்கள் எவ்வித அச்சமோ, பீதியோ அடைய தேவையில்லை.

கட்டடம் இடிக்கப்படும் பணி முடிவடைந்தவுடன் பொதுமக்கள் தங்கள் வீடுகளுக்கு செல்வதற்கு உரிய அறிவிப்பு வழங்கப்படும். எனவே அப்பகுதியில் உள்ள அனைத்து பொதுமக்களும் முழு ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர் செயலர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**